(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 56.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2021 பெப்ரவரி 24, புதன்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

34/2020

கௌரவ ஹேஷா விதானகே,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை மாகவலி அதிகாரசபைக்குரிய காணிகளை பாரிய கருத்திட்டங்களுக்காக வழங்கும் முறைமை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) வலவ வலயத்தின், சந்திரிக்கா வாவிப் பிரிவில் டோல் லங்கா(தனியார்) கம்பனி மற்றும் விட்டா ஓகனிக் (தனியார்) கம்பனிக்கு வாழைப் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவை தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இக்காணி வழங்கலானது உரிய முறைமைக்கமைய வழங்கப்படவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வரா என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

142/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுரைச்சோலை "லக்விஜய மின் உற்பத்தி நிலையம்" தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தினால் வருடாந்தம் உற்பத்தி செய்யப்படுகின்ற மின் அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நுரைச்சோலை "லக்விஜய மின் உற்பத்தி நிலையம்" தாபிக்கப்பட்ட திகதி முதல் இற்றைவரை அது செயலிழந்த சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் தொடர்ச்சியான செயலிழப்பு தொடர்பாக அமைச்சினால் இற்றைவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

174/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொவிட்-19 தொற்றுநோய் பரவிய கடந்த காலப்பகுதியில் தொழில் திணைக்களம், சில தொழிற்சங்கங்கள் மற்றும் முதலாளிமார் சங்கம் இணைந்து தொழிலாளர்களது மாதாந்த சம்பளத்தினை 14,500/- ரூபா வரை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி சம்பளக் குறைப்பு நிறுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) பதிவு செய்யப்படாத முறைசாரா துறையில் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் சம்பளக் குறைப்பினை நிறுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

236/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காகச் செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி தேங்காய் எண்ணெய் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு தேங்காய் எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

268/2020

கௌரவ புத்திக பத்திரண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிராம உத்தியோகத்தர் சேவைக்கென சேவைப் பிரமாணக் குறிப்பொன்று தயாரிக்கப்பட வேண்டும் என்பதையும்;

(ii) கிராம உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படும் கொடுப்பனவுகள் தொடர்பில் மீளாய்வு செய்து அவர்களுக்கு நீதி நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதையும்;

(iii) கிராம உத்தியோகத்தர் சேவை மற்றும் கிராம உத்தியோகத்தர் வாழ்க்கைத் தொழிலில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) கிராம உத்தியோகத்தர் சேவையின் ஆக்கவிளைவினை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா;

(ii) ஆமெனில், அந் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

600/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணம், நெடுந்தீவில் பிரதான போக்குவரத்து மார்க்கமான மாவிலித்துறையிலிருந்து சாராப்பிட்டி ஊடாக கோட்டைக்காடு வரையுள்ள 08 கிலோ மீற்றர்கள் நீளமான நெடுந்தீவு பிரதான வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் உள்ளதென்பதையும்;

(ii) மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்ற இந்த பிரதான வீதியை மாணவர்கள், அலுவலர்கள், முதியவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் பயன்படுத்துவதுடன் நோயாளர் காவு வண்டிகளும் இந்த வீதியில் பயணிக்கின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்தப் பிரதான வீதி இதுவரை புனரமைக்கப்படாமைக்கான காரணம் யாது என்பதையும்;

(ii) இந்த வீதி முழுமையாக எக்காலப்பகுதியில் புனரமைக்கப்படும் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

633/2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள திக்கோடை வைத்தியசாலையானது மக்களது தேவைக்குப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதென்பதையும்;

(ii) அதன் காரணமாக மேற்படி வைத்தியசாலையில் சேவைகளைப் பெறுவதற்காக வருகைதரும் நோயாளர்கள் பல்வேறுபட்ட சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையில் நாளாந்தம் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் நோயாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

657/2020

கௌரவ சந்திம வீரக்கொடி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி, ரிச்மன்ட் கல்லூரிக்கு மிக அருகில் இலக்கம் 03, 04 ஆம் ஒழுங்கை, ரிச்மன்ட் கந்த, காலி எனும் முகவரியில் வசிக்கும் எம்.எம். லெவ்மிக தத்விது குணதிலக்க என்ற பிள்ளை காலி ரிச்மன்ட் கல்லூரியின் முதலாம் தரத்திற்கு சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பதையும்;

(ii) 2019.11.10 ஆம் திகதிய B-378 இலக்கத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடு தொடர்பில் குறித்த இடம் சார் விசாரணை மேற்கொள்ளாமல் மேற்படி மேன்முறையீட்டை கவனத்திற் கொள்ளாது இப்பிள்ளையை பாடசாலையில் இணைத்துக் கொள்ளவில்லை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) தற்போது மேற்படி பிள்ளைக்கு கல்வி கற்பதற்கு பாடசாலை இல்லை என்பதால் இது தொடர்பில் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திகதி யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

668/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள மல்வத்து ஓயா ஆற்று நீர்ப்பாசன கருத்திட்டத்திற்குச் செலவாகும் நிதி எந்த வகையில் பெறப்படவுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்கான நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு எவ்வளவு காலம் செல்லும் என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் பயன்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

718/2020

கௌரவ சாந்த பண்டார,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வது விளையாட்டு நடவடிக்கைகளுக்கு வசதியாக அமையும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையில் தடகள விளையாட்டுக்கென தற்போது காணப்படுகின்ற சர்வதேச விளையாட்டு மைதானங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மாவட்ட மட்டத்தில் முழுமையான வசதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானங்களை அமைப்பதற்கான முறையொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்காக நிதி ஏற்பாடுகளை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

கௌரவ புத்திக பத்திறண ,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"வைட் றோஸ் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்."

2.

கௌரவ புத்திக பத்திறண,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதியவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்."

3.

கௌரவ புத்திக பத்திறண,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 3),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"றுஹுணு உதானய அமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்."

4.

கௌரவ புத்திக பத்திறண,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 4),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"வர்ள்ட் லய்ப் லய்ன் யோகா நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்."

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2021 பெப்ரவரி 23),— "1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 53 ஆம் பிரிவின் கீழ் இரத்தினக்கல், ஆபரண உரிமக் கட்டணம் தொடர்பில் கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 மார்ச் 02 ஆம் திகதிய 2165/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 2.

வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதிச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி அறவீடு தொடர்பில் வர்த்தக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2020 ஒக்டோபர் 28 ஆம் திகதிய 2199/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதிச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி அறவீடு தொடர்பில் வர்த்தக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2020 ஒக்டோபர் 29 ஆம் திகதிய 2199/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— ( 235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைக் கட்டணங்கள் தொடர்பில் 2021.02.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2020 நவம்பர் 17 ஆம் திகதிய 2202/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1), 6 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 சனவரி 05 ஆம் திகதிய 2209/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 ஒக்டோபர் 19 ஆம் திகதிய 2198/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1), 6 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 ஒக்டோபர் 29 ஆம் திகதிய 2199/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

1.

1358/2020

கௌரவ அநுர திஸாநாயக்க,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2020 ஆம் ஆண்டில் கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம் மற்றும் வரையறுக்கப்பட்ட லங்கா சதொச ஆகிய நிறுவனங்களினால் —

(i) கொள்வனவு செய்யப்பட்ட சீனியின் மொத்த அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி சீனி கொள்வனவு செய்யப்பட்ட திகதிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி சீனி எந்த நிறுவனங்களிலிருந்து எவ்வளவு கொள்வனவு செய்யப்பட்டது என்பதையும்;

(iv) மேற்படி சீனி ஒரு கிலோகிராமின் கொள்வனவு விலை எவ்வளவு என்பதையும்;

(v) சீனி ஒரு கிலோகிராம் விற்பனை செய்யப்பட்ட சில்லறை விலை எவ்வளவு என்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா சதொச நிறுவனம் ஆகியவற்றின் 2020 ஆம் ஆண்டுக்கான இலாபம் அல்லது நட்டம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1359/2020

கௌரவ அநுர திஸாநாயக்க,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்காக கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்திற்கும் வரையறுக்கப்பட்ட லங்கா சதோச நிறுவனத்திற்கும் ஏற்பட்ட விளம்பரச் செலவுகள் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி விளம்பரங்களைத் தயாரிப்பதற்கும் அவற்றை பிரச்சாரம் செய்வதற்குமான பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனங்களையும் அதன் நிமித்தம் அவ்வொவ்வொரு நிறுவனத்திற்கும் செலுத்தப்பட்ட தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1360/2020

கௌரவ அநுர திஸாநாயக்க,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மஞ்சளின் அளவு எவ்வளவு;

(ii) மஞ்சளின் அளவானது அவை இறக்குமதி செய்யப்பட்ட ஒவ்வொரு நாட்டின் அடிப்படையில் எவ்வளவு;

(iii) மஞ்சள் இறக்குமதிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் எவ்வளவு;

என்பதை ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1361/2020

கௌரவ அநுர திஸாநாயக்க,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அமைந்துள்ள ஆறுகள் மற்றும் மணல் படிவுகளிலிருந்து மணல் அகழ்வதற்காக இதுவரையில் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள மணல் கரைசேர்க்கும் இடங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் வழங்கப்பட்டுள்ள ஆண்டு மற்றும் அனுமதிப்பத்திரதாரியின் பெயர் என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியினால் மேற்படி மணல் கரைசேர்க்கும் இடங்களினூடாக கரைசேர்க்கப்பட்ட மணலின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1362/2020

கௌரவ அநுர திஸாநாயக்க,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இனங்காணப்பட்டுள்ள மகாவலி வலயங்களுக்குச் சொந்தமான பயிர் செய்வதன் பொருட்டு பகிர்ந்தளிக்கப்படுவதற்குப் பொருத்தமான காணிகளின் அளவு ஒவ்வொரு மகாவலி வலயத்தின் பிரகாரம் தனித்தனியாக எவ்வளவு;

(ii) 2020 ஆம் ஆண்டில் அவ்வாறு இனங்காணப்பட்ட காணிகளுள் பயிர் செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு;

(iii) மேற்படி காணிகள் வழங்கப்பட்டுள்ள ஆட்கள்/நிறுவனங்கள் யாவை;

(iv) மேற்படி ஒவ்வொரு ஆளுக்கும் நிறுவனத்திற்கும் வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு ஒவ்வொரு மகாவலி வலயத்தின் பிரகாரம் வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?